அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 291

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7,
1985ம் வருடம் வைகாசி மாதம் 21ந் திகதி

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

# 1985 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க விதுரர் அனாதைகளுக்கான ஓய்வூதியச் சட்டம் (பெண் உத்தியோகத்தரினால் விருப்பம் தெரிவித்தல்)

1. இதன் தொடர்பாக 1983.11.28 ஆந் திகதியுடைய 231 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையை கவனிக்க.

2. ஒரு பெண் உத்தியோகத்தர் விதுரர் அனாதைகள் ஓய்வூதியத்திட்டத்தில் புதிய விருப்பம் தெரிவிக்கும் காலத்தை நீடிக்கச் செய்யுமுகமாக 1983 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க விதுரர் அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு 1985 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

3. இன்றைய நிலை பின்வருமாறு :

(1) (அ) ஒரு பெண் உத்தியோகத்தர் 1983.08.01 ஆந் தேதிக்கு முன்னர் நிரந்தர ஓய்வூதியமுள்ள பதவி வகித்தும் அன்று சந்தாதாரராகச் சேர விருப்பந் தெரிவிக்காமலிருந்தால் 1986ம் வருடம் மே மாதம் 10 ஆந் திகதிக்கு முன் சந்தாதாரராகச் சேர விருப்பந் தெரிவிக்கலாம்.

(ஆ) முன்னைய சுற்றறிக்கையின்படி சந்தாதாரராகச் சேரவிரும்பாத ஒரு உத்தியோகத்தர் இப்பொழுது புதிய விருப்பத்தைத் தெரிவிக்கலாம்.

(இ) முன்னைய சுற்றறிக்கையின்படி சந்தாதாரராக இருக்க விரும்பாத ஒருவரும் புதிய சந்தாதாரராகச் சேரத் தமது விருப்பத்தைத் தெரிவிக்கலாம்.

(ஈ) 1986ம் வருடம் மே மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் இறந்த ஒரு பெண் உத்தியோகத்தருக்கு கணவரும்/அல்லது பிள்ளை/பிள்ளைகளும் இருப்பின் அவர் சந்தாதாரராகக் கணிக்கப்படுவர்.

(ii) சந்தாதாரராகவிருந்து, நீங்குவதற்கு வேண்டிய தகைமைகள் :

(அ) முன்னைய சுற்றறிக்கையின்படி, இத் திட்டத்தில் சேர விருப்பம் தெரிவித்து, ஆனால் 1986ம் வருடம் மே மாதம் 10ம் திகதிக்கு முன்னர், சந்தாதாரராகவிருந்து விலகவிரும்பும் ஒரு பெண் உத்தியோகத்தர்.

(ஆ) முன்னர் இத் திட்டத்தின்கீழ் சேர்ந்தும் ஆனால், இப்பொழுது இத் திட்டத்திலிருந்து விலக விருப்பம் தெரிவித்தவுடன், அந்தப் பெண் உத்தியோகத்தரிடமிருந்தும் சந்தா அறவிடுவது உடனடியாக நிற்பாட்டப்பட வேண்டும்.



2—ஏ 084158

(இ) 29ம் பொதுப்படிவத்தில் இரட்டைப் பிரதியாக கடைசித் திகதிவரை செலுத்திய சந்தாப் பணத்தை திருப்பிப் பெறுவதற்கு, மனுப்பண்ண லாம். இதுவரையும், விதுரர் அனாதைகள் ஓய்வூதிய இலக்கம் பெற்றி ராவிடின் அவ் இலக்கத்தைப் பெறுவதற்கு, பணத்தைத் திருப்பிப்பெற மனுப்பண்ணும் 29ம் பொதுப்படிவப்பத்திரத்துடன் 864ம் பொதுப் படிவத்தையும் அனுப்பவேண்டும். விவாக அத்தாட்சிப் பத்திரம் போன்ற உதவும் ஆவணங்கள் இணைக்கப்படத் தேவையில்லை. இதற்கான விண்ணப்பப்பத்திரங்கள், செயலாளர்—கணக்காளர், விதுரர், அனாதை கள் ஓய்வூதியக் கந்தோர் கொழும்பு—1 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(ஈ) பின்னர் அப் பெண் இதுவரையும் தான் செலுத்திய சந்தாத் தொகை முழுவதையும், எவ்வித வட்டியுமின்றி பெற உரித்துடையவராகின்றார். மேலும் அப் பெண்ணிற்கு இத் திட்டத்தின்கீழ் உள்ள எவ்வித நன்மை கட்கும் உரிய தகைமை அற்றுவிடுகிறது.

4. 01.08.1983ல் அல்லது அதற்குப் பின்னர் நிரந்தர ஓய்வூதியம் உள்ள பதவியில் நியமிக்கப்பட்ட ஒரு பெண் உத்தியோகத்தர் சுயமாகவே இத் திட்டத்தில் அங்கத்தவர் ஆவர்.

5. **விருப்பத்தை மாற்றியபின் உள்ள சந்தாப் பணம்** : முன்னர் இத் திட்டத்தில் சேர விரும்பாத பெண் உத்தியோகத்தர் ஒருவர் இப்பொழுது இத் திட்டத்தில் சேர விரும்பினால், உடனடியாக அவருடைய சந்தாப் பணத்தைத் திணைக்களம் அறவிட வேண்டும். 1983.08.01 ஆந் திகதியிலிருந்து செலுத்தவேண்டிய பாக்கி சந்தாப் பணத்தை இருபத்திநான்கு தவணைகட்குக் கூடாமல் தவணை முறைப்படி அறவிடலாம்.

6. **இறந்த உத்தியோகத்தர்கள்.** 1986ம் வருடம் மே மாதம் 10ம் தேதிக்கு முன்னர் இறந்த பெண் உத்தியோகத்தர் அத் தினம்வரை சந்தாதாரராக இருக்க லாம். அவர் தன் கணவனையும்/அல்லது பிள்ளையையும்/பிள்ளைகளையும் விட்டுச் சென் றிருந்தால் இத்திட்டத்தின்கீழ் அவர் ஒரு சந்தாதாரராகக் கணிக்கப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமாயின் பின்வரும் ஆவணங்களை செயலாளர்/கணக்காளர், விது ரர், அனாதைகள் ஓய்வூதியக் கந்தோர், கொழும்பு 01 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(i) அனாதைகள் ஓய்வூதிய விடயத்தில் கணவனால் அல்லது பாதுகாவலனால் பொதுப்படிவம் 86 ஏயில் செய்யப்பட்ட ஆரம்பப் பிரகடனம்.

(ii) விவாக அத்தாட்சிப் பத்திரம்.

(iii) இறந்த உத்தியோகத்தரின் இறப்புச் சாட்சிப் பத்திரம்.

(iV) நிதிப் பிரமாணம் 1729 ன் கீழுள்ள அறிக்கை.

(V) சேவையிலிருக்கும்போது இறந்தால் பொதுப் படிவம் 55ல் ஓய்வூதிய மனுப்பத்திரம் இறந்த தினத்தன்று சேவையிலிருந்து இளைப்பாறிய தாகக் கணிக்கப்பட வேண்டும்.

**7. 01.08.1983க்கு முன்னர், ஆற்றிய சேவைக்கான சந்தாப்பணம்.**

7.1 01.08.1983க்கு முன்னர், நியமிக்கப்பட்ட பெண் உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வூதியச் சட்டத்தின்கீழ், கணிக்கத்தக்கதும், ஓய்வூதியமுடையதுமான சேவைக் காலத்திற்கு, தமது மொத்தச் சம்பளத்தில் (4%) நான்கு விகிதத்தையும், நான்கு வீத (4%) வட்டியையும், விரும்பின் செலுத்தலாம்.

7 : 2 7 : 1ல் குறிக்கப்பட்ட சந்தாவையும், வட்டிப் பணத்தையும் அவ் உத்தியோகத்தர் கொடுப்பனவு செய்யும் முறை வருமாறு :

(அ) அரச சேவை செய்யும் எக்காலத்திலும் ஒருங்கு திரட்டிய பணமாக அல்லது

(ஆ) ஓய்வூதியச் சட்டத்தின்கீழ், இளைப்பாறியதும், கொடுப்பனவு செய்யத்தக்க, ஒருங்குதிரட்டிய, மொத்தப் பணத்திலிருந்து அல்லது

(இ) அரச சேவையிலிருந்து இளைப்பாறிய மாதத்தில் அவரின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்ட மாதாந்த சந்தாப் பணம் அல்லது அவ் உத்தியோகத்தராலும், பணிப்பாளராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அதிகப் பணத்தை, அவருடைய ஓய்வூதியத்திலிருந்து, மாதாந்த தவணைப் பணமாகச் செலுத்தலாம்.

7 :3 01.08.1983க்கு முன்னர், சந்தா கொடுத்தல் கட்டாயம் இல்லை.

8. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும், மாதிரிப்படிவத்தில், முன்னர் தெரிவித்ததை மாற்றும் விருப்பம் தெரிவிக்கப்பட வேண்டும்.

டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன,
செயலாளர்,
பொது நிருவாக அமைச்சு,

---

## "அ" இணைப்பு

இல. 201, 85.05.21 ந் திகதி பொது நிருவாக சுற்று நிருபப்படி விருப்பந் தெரிவித்தல்
(முப்பிரதிகளில் பூரணப்படுத்தப்படவேண்டும்)

1. உத்தியோகத்தர் பெயர் :——————.

2. பிறந்த திகதி :——————.

3. பதவி :——————.

4. ஓய்வூதியமுள்ள பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :——————.

5. 1983ம் வருடத்து 24ம் இலக்க விதுரர் அனாதை ஓய்வூதியச் சட்டத்தின்கீழ் ...... ...................... ஆகிய நான் சேர விரும்புகிறேன்/விரும்பவில்லை எனது விருப்பம் தெரிவித்தமை எதிர்வரும் திகதி ஒன்றில் மாற்றவோ அழிக்கவோ முடியாதென்பதை நன்கறிவேன்.

6. பொது நிருவாகச் சுற்றறிக்கை ................கீழ் நான் இத் திட்டத்தில் சேர விரும்புகிறேன்/விரும்பவில்லை.

திகதி :—............ ........................

உத்தியோகத்தரின் கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்.**

விதுரர் அனுதை ஒய்வூதியத் திட்டத்துக்குரிய 1983.11.28 ஆந் திகதியுடைய **231**வது பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி இப் பெண் உத்தியோகத்தர் நிரந்தர மான ஓய்வூதியத்துக்குரியதுமான பதவி வகிக்கிருர் என்றும் மேற்கண்டதிட்டத்திற் சேர தகுதியுடையவர் என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். மேற்கண்ட தகவல் கள் சரியானவை.

**திகதி :**

..............................

திணைக்களத் தலைவர்/

**பன்முகப்படுத்தப்பட்ட இளேத் தலைவர்.**

---

**எனது இலக்கம்**

செயலாளர்/கணக்காளர்,

விதவைகள் அனுதைகள் ஓய்வூதியக் கந்தோர்,

கொழும்பு 1.

இரண்டு பிரதிகள் அனுப்பப்படுகின்றன.

**திகதி :—**

..............................

திணைக்களத் தலைவர்/

பன்முகப்படுத்தப்பட்ட இளேத் தலைவர்.

**பி.கு.**—இப் பிரகடனத்தின் பிரதி ஒன்று விண்ணப்பதாரரின் பெயர்வழிக் கோவை யில் சேர்க்கப்பட வேண்டும். பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.